## விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகள்

1, விண்ணப்பதாரர் தாங்கள் விண்ணப்பிக்க விரும்பும் போக்குவரத்துக் கழகத்தில் ஒரு மண்டலத்தை தேர்வு செய்து விண்ணப்பிக்க வேண்டும்,

2, தகுதி

I. வயது வரம்பு 01.07.2025

| பொது | முன்னாள் இராணுவத்தினருக்கு |
|---|---|
| • குறைந்தபட்சம் 24 வயது<br>• பொது பிரிவினருக்கு (OC) அதிகபட்சம் 40 வயது<br>• BC/BCM/MBC/DNC/SC/SCA/ST ஆகிய பிரிவினருக்கு அதிகபட்சம் 45 வயது | • பொது பிரிவினருக்கு (OC) அதிகபட்சம் 50 வயது<br>• BC/BCM/MBC/DNC/SC/SCA/ST ஆகிய பிரிவினருக்கு அதிகபட்சம் 55 வயது. |

II. அ) கல்வி தகுதி 01.01.2025 வரை

- 10 ஆம் வகுப்பு தேர்ச்சி (அல்லது) அதற்கு இணையானது.
- தமிழில் எழுதவும், படிக்கவும் மற்றும் பேசவும் தெரிந்திருக்க வேண்டும்.

ஆ) தொழில்நுட்ப தகுதி

- 01.01.2025 அன்று செல்லதக்க கனரக வாகனம் ஓட்டுநர் உரிமம் உடன் குறைந்தபட்சம் 18 மாதம் முன்அனுபவம் தேவை
- செல்லதக்க நடத்துநர் உரிமம் / 01.01.2025 முன்பாக பெற்றிருக்க வேண்டும்
- சாலை போக்குவரத்து நிறுவனம் மூலம் தேர்ச்சி பெற்றவர்களுக்கு குறைந்தபட்சம் 24 வயது மற்றும் செல்லத்தக்க கனரக வாகன ஓட்டுநர் உரிமம் பெற்று 01.01.2025 -ன்படி 18 மாதங்கள் பூர்த்தியடைந்து இருக்க வேண்டும் என்ற நிபந்தனைகளிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது.
- செல்ல தக்க பொதுப் பணி வில்லை.(Badge).
- அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் முதலுதவி சான்றிதழ் (First Aid Certificate).

இ) உடல் தகுதி

- குறைந்தபட்சம் 160 செ. மீ உயரமும்,
- 50 கிலோகிராம் எடையும் இருக்க வேண்டும்.
- நிறக்குருடு மற்றும் இரவு குருட்டுத்தன்மை இல்லாமல் தெளிவான கண் பார்வை இருக்க வேண்டும்.
- எந்தவித உடல் அங்க குறைபாடு இன்றி (Physical deformity அற்றவராக) இருத்தல் வேண்டும்.
- நன்கு காது கேட்கும் திறன் இருக்க வேண்டும்.
- சான்றிதழ் சரிபார்ப்பின் போது விண்ணப்பதாரர்கள் உரிய மருத்துவ சான்றிதழ்கள் மற்றும் அசல் ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

3, விண்ணப்பக் கட்டணம் செலுத்தும் முறை:

- விண்ணப்பக் கட்டணம் பொது பிரிவினருக்கு ரூ.1180/-ஐ (18% ஜிஎஸ்டி உட்பட) மற்றும் SC/ST பிரிவினருக்கு ரூ.590/- ஐ (18% ஜிஎஸ்டி உட்பட) விண்ணப்பதாரர்கள் இணைய வழிதளம் முறையில் விருப்பத்தைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் இணைய வங்கி / பற்று அட்டை / கடன் அட்டை மூலம் செலுத்த வேண்டும். விண்ணப்பதாரர்கள் சேவை கட்டணமும் சேர்த்து செலுத்த வேண்டும்.

1. தேர்வு அனுமதிச் சீட்டு

- தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்கள் எழுத்து தேர்வில் கலந்து கொள்ள அனுமதி சீட்டு இணைய வழிதளம் (www.arasubus.tn.gov.in) மூலமாக பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும்.

- மேலும் தேர்வாளர்கள் Online மூலம் விண்ணப்பிக்கும் போது தெரியப்படுத்தப்படும் பதிவு எண் (Application No) விபரத்தை பத்திரமாக குறிப்பு எடுத்துக் கொள்ள வேண்டும். மேற்படி பதிவு எண்ணை உபயோகப்படுத்தி மட்டுமே தேர்வு அனுமதிச் சீட்டு (Hall ticket) பதிவிறக்கம் செய்ய இயலும்.

4. தேர்வு நடைமுறை:

(i) எழுத்துத் தேர்வு மதிப்பெண்களின் அடிப்படையில் விண்ணப்பதாரர்கள் அடுத்தகட்ட செயல்முறை திறன் தேர்வு மற்றும் நேர்காணலுக்கு அழைக்கப்படுவார்கள்.

(ii) அனைத்து தகுதியான விண்ணப்பதாரர்களும் எழுத்துத் தேர்விற்கு பரிந்துரைக்கப்பட்ட வழிகாட்டுதல்களின்படி அனுமதிக்கப்படுவார்கள்.

(iii) வினாத்தாள் தமிழில் மட்டுமே வடிவமைக்கப்பட்டிருக்கும்.

(iv) விண்ணப்பதாரர்கள் 100 மதிப்பெண்களுக்கான எழுத்துத் தேர்வில் கலந்து கொள்ள வேண்டும்.

(v) எழுத்து தேர்வு பத்தாம் வகுப்பு பொதுத்தமிழ் (50 மதிப்பெண்கள்), பொது அறிவு மற்றும் தொழில்முறை திறனறி தேர்வு (50 மதிப்பெண்கள்) ஆகிய பாடங்களை உள்ளடக்கியது. பொதுத்தமிழ் தேர்வில் கட்டாய தேர்ச்சி (40 சதவீதம் -20 மதிப்பெண்கள்) அவசியம். பொது தமிழ் தேர்வில் தேர்ச்சி பெறாத விண்ணப்பதாரர்களின் பொது அறிவு மற்றும் தொழில்முறை திறனறி தேர்வு தாள் மதிப்பீடு செய்யப்பட மாட்டாது. மேலும் ஓட்டுநர் உடன் நடத்துநர் திறன் தேர்வு (செயல்முறை) மற்றும் நேர்காணலுக்கு அழைக்கப்பட மாட்டார்கள்.

vi) எழுத்து தேர்வில் பெறப்பட்ட மதிப்பெண்களின் அடிப்படையில் பணி நியமனத்திற்கான அரசு விதிமுறைகளின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் நிர்ணயிக்கப்பட்ட உடற்தகுதி சரிபார்ப்பு, சான்றிதழ் சரிபார்ப்பு, ஓட்டுநர் உடன் நடத்துநர் திறன் தேர்வு (செயல்முறை - 80 மதிப்பெண்கள்) மற்றும் நேர்காணலுக்கு (20 மதிப்பெண்கள்) உட்படுத்தப்படுவார்கள்.

vii) விண்ணப்பதாரர்கள் மொத்தமாக 150 மதிப்பெண்களுக்குப் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் இறுதியாக தேர்வு செய்யப்படுவார்கள்.

viii) தகுதியான விண்ணப்பதாரர்கள் பெற்ற தொழில்முறை திறன் தேர்வு மதிப்பெண்கள், ஓட்டுநர் செயல்முறை திறன் தேர்வு மற்றும் நேர்காணலில் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் இறுதியாக தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

ix) தேர்வுத் திட்டம்

- விண்ணப்பதாரர்கள் வரிசை எண் (iv)-ல் குறிப்பிட்டுள்ளவாறு 100 மதிப்பெண்களுக்கான எழுத்துத் தேர்வில் கலந்து கொள்ள வேண்டும்.

- விடைகளை குறித்துக்காட்ட விண்ணப்பதாரர்களின் தனிப்பயனாக்கப்பட்ட (OMR) விடைத்தாள் ஒன்று அறை கண்காணிப்பாளரால் தரப்படும். OMR விடைத்தாள் ஏதேனும் குறைபாடுடையதாக இருந்தால், உடனடியாக அதில் விடையை குறித்துக்காட்டுவதற்கு முன் அறை கண்காணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டு வந்து வேறொரு OMR விடைத்தாளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

- விடைத்தாளில் ஒவ்வொரு கேள்வி எண்ணிற்கும் எதிரில் (A) (B) (C) (D) மற்றும் (E) என ஐந்து வட்டங்கள் இருக்கும். ஒரு கேள்விக்கு விடையளிக்க நீங்கள் சரியென கருதும் விடையை ஒரே ஒரு வட்டத்தில் மட்டும் நீலம் அல்லது கருமை நிறமுடைய பந்து முனைப் பேனாவில் குறித்துக் காட்ட வேண்டும். உங்களுக்கு விடை தெரியவில்லை எனில், நீங்கள் (E) என்பதை அவசியம் நிரப்ப வேண்டும். ஒவ்வொரு கேள்விக்கும் ஒரு விடையைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் குறிக்க வேண்டும். உதாரணமாக நீங்கள் (A) என்பதை சரியான விடையாகக் கருதினால் அதை பின்வருமாறு குறித்துக் காட்ட வேண்டும். Ex - (A) (B) (C) (D) (E)

  ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையளித்தால் அதில் ஒன்று சரியாக இருந்தாலும் அந்த விடை தவறானதாகக் கருதப்படும்.

- எழுத்துத் தேர்விற்கு பொதுத் தமிழ் பொது அறிவு மற்றும் தொழில்முறை திறனறி என தலா 50 எண்ணிக்கையிலான கேள்விகள் கேட்கப்படும். எதிர்மறை மதிப்பெண்கள் இல்லை. அதிகபட்ச நேரம் 90 நிமிடங்கள். மொத்தம் 100 கேள்விகள்.
- ஓட்டுநர் செயல்முறை (Practical) திறன் தேர்வு 80 மதிப்பெண்களும் மற்றும் நேர்காணல் 20 மதிப்பெண்களும் கொண்டதாக இருக்கும்.

| எழுத்து தேர்வு (ஒரு மதிப்பெண் வினா விடை) | | | |
|---|---|---|---|
| வ.எண் | பாடம் | கால அளவு | அதிகபட்ச மதிப்பெண்கள் |
| 01 | <u>தேர்வு தாள்</u><br><br>பகுதி- அ<br>கட்டாய தமிழ் மொழித் தகுதி மற்றும் மதிப்பீட்டுத் தேர்வு<br>(வினா எண்.01முதல் 50 வரை)<br><br>பகுதி-ஆ<br>பொது அறிவு<br>(வினா எண்.51முதல் 70 வரை)<br><br>பகுதி- இ<br>தொழில்முறை திறனறி தேர்வு<br>(வினா எண்71முதல் 100 வரை) | 90 நிமிடம் | 50<br>(40 % அதாவது 20 மதிப்பெண்கள் அவசியம்)<br><br>20<br><br>30 |
| 02 | ஓட்டுநர் செயல்முறை (Practical) திறன் தேர்வு | | 80 |
| 03 | நேர்காணல் | | 20 |
| | (பகுதி-ஆ, பகுதி-இ,வ.எண்.02 & 03)<br>மொத்தம் | | 150 |

x) தமிழ் நாடு முழுவதும் தேர்ந்தெடுக்கப்பட்ட மையங்களில் எழுத்துத் தேர்வு நடத்தப்படும். எழுத்து தேர்விற்கான தேதி பின்னர் அறிவிக்கப்படும். விண்ணப்பதாரர்கள் பொதுவான வழிமுறைகளை வ.எண் 07-ல் குறிப்பிட்டுள்ளவாறு பின்பற்ற வேண்டும்.

➢ எழுத்து தேர்விற்கு உண்டான பாடத்திட்டம் கீழே விவரிக்கப்பட்டுள்ளது:

பகுதி - அ

பொதுத்தமிழ் - பத்தாம் வகுப்பு பாடத்திட்டம்

பகுதி - ஆ

- பொது அறிவு / பொது எண்கணித அறிவு
- முதலுதவி பற்றிய அறிவு

பகுதி - இ

தொழில்முறை திறனறி பாடத்திட்டம்

- வாகன பொறிமுறைமின் அடிப்படைகள்.
- போக்குவரத்து விதிகள் மற்றும் போக்குவரத்து அடையாள பலகைகள் பற்றிய அடிப்படை அறிவு.

➢ அரசு போக்குவரத்து கழக பயிற்சி மையங்கள் மற்றும் சாலை போக்குவரத்து நிறுவனத்தின் (IRT) குறிப்பிட்ட ஓட்டுநர் சோதனை மையங்களில் ஓட்டுநர் செயல்முறை திறன் தேர்வு (Practical) நடைபெறும். விண்ணப்பதாரர்கள் வாகனம் நகர்த்துதல், கியர் மாற்றுதல், சாய்வில் ஏறுதல், பின்பக்கமாக நகர்த்தி பார்க்கிங், பிரேக்கிங் மற்றும் நிறுத்துதல் போன்ற சாதாரண ஓட்டுநர் திறன்களுக்கான நடைமுறை சோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள். மேலும் பயணச்சீட்டு மற்றும் பணம் கையாளுதல் போன்ற நடத்துனருக்கு பொருத்தமான நடைமுறை சோதனையும் நடத்தப்படும்.

xi) தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் அவர்கள் விண்ணப்பித்த மண்டலங்களில் உள்ள பணிமனைகளில் பணியமர்த்தப்படுவார்கள். நியமன அதிகாரியால் மட்டுமே ஓட்டுநர் உடன் நடத்துனர்களுக்கு பணிமனை ஒதுக்கீடு செய்யப்படும்.

05. குற்றவியல் வழக்குகள் / உரிமையியல் வழக்குகள்/ ஒழுங்கு நடவடிக்கைகள் தொடர்பான உறுதிமொழி:

i. இணைய வழி விண்ணப்பத்தில் தன்மீதான நிலுவையிலுள்ள குற்றவியல் / உரிமையியல் ஒழுங்கு நடவடிக்கைகள் பற்றி தெரிவித்துள்ள விண்ணப்பதாரர்கள், அது தொடர்பான முதல் தகவல் அறிக்கையின் நகலை / குற்றக் குறிப்பாணையின் நகலை (நேர்வுக்கேற்ப/ Status) கண்டிப்பாகப் பதிவேற்றம் / சமர்ப்பிக்க வேண்டும். மேற்கண்ட ஆவணங்களை பதிவேற்றம் செய்ய தவறும் பட்சத்தில் விண்ணப்பம் உரிய வழிமுறைகளைப் பின்பற்றிய பிறகு நிராகரிக்கப்படும்.

ii. தடையின்மைச் சான்றிதழை சமர்ப்பித்த பிறகோ அல்லது இணைய வழி விண்ணப்பத்தினைச் சமர்ப்பித்த பிறகோ, நியமனம் தொடர்பான பணிகள் முழுமையாக நிறைவடைவதற்கு முன் வரை உள்ள தெரிவு பணிகளின் எந்த ஒரு நிலையின் போதும் விண்ணப்பதாரர் மீது, ஏதேனும் குற்றவியல் வழக்கு பதியப்பட்டிருந்தாலோ / ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தாலோ, அவர் குற்றத்தீர்ப்பு / தண்டனை ஏதும் பெற்றிருந்தாலோ, இப்போக்குவரத்துக் கழகத்தால் ஆவணங்களைப் பதிவேற்றம் / சமர்ப்பிக்கக் கோரும் நிலையில், விண்ணப்பதாரர்கள் அது குறித்த உண்மை விவரங்களை, இப்போக்குவரத்துக் கழகத்திற்கு தெரிவித்தல் வேண்டும். மேலும், இந்த அறிவுரையினை கடைபிடிக்கத் தவறினால் அத்தகைய விண்ணப்பதாரர்களுடைய விண்ணப்பம் இப்போக்குவரத்துக் கழகத்தால் உரிய வழிமுறைகளைப் பின்பற்றி ரத்து செய்யப்படும். மேலும் விண்ணப்பிக்கும் போது தெரிவிக்காமல் பணி நியமனத்திற்கு பிறகு தெரியவரின் உரிய வழிமுறைகளைப் பின்பற்றிய பிறகு பணிநியமனம் ரத்து செய்யப்படும்.

iii. மேற்கூறிய அறிவுறுத்தலில் ஏதேனும் விதி மீறப்பட்டால் அவர்களது விண்ணப்பம் உரிய வழிமுறைகளைப் பின்பற்றிய பிறகு நிராகரிக்கப்படும்.

06. ஏனைய முக்கிய அறிவுரைகள்:

அ) தேர்வாளர்களின் தேர்விற்கான தங்களுடைய தகுதிகளை உறுதி செய்தல்:

தேர்விற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் குறிப்பிட்டுள்ள அறிவுரைகளை நன்கு படித்த பின்னர் தாங்கள் அத்தேர்விற்கான அனைத்துத் தகுதிகளையும் பெற்றுள்ளீரா என உறுதி செய்து கொள்ள வேண்டும். எழுத்துத் தேர்வு / உடற்தகுதி சோதனை / சான்றிதழ் சரிபார்ப்பு / செய்முறை தேர்வு / நேர்காணல் மற்றும் கலந்தாய்விற்கு அனுமதிக்கப்படுவது அல்லது தெரிவு செய்யப்பட்டோர் பட்டியலில் தற்காலிகமாக விண்ணப்பதாரரின் பெயர் சேர்க்கப்படுவதால் மட்டுமே, அவ்விண்ணப்பதாரர் பதவி நியமனம் பெற உரிமை அளிக்கப்பட்டவராகமாட்டார்.

எனவே, விண்ணப்பதாரரின் விண்ணப்பம், எல்லா நிலைகளிலும் தற்காலிகமானது. விண்ணப்பதாரர்களால் அளிக்கப்பட்ட விவரங்கள் தவறு என்றாலோ இப்போக்குவரத்துக் கழக அறிவுரைகள் அல்லது விதிகள் மீறப்பட்டுள்ளன என்று கண்டறியப்படும் பட்சத்திலோ, எந்நிலையிலும், தெரிந்தெடுக்கப்பட்ட பின்னர் கூட, விண்ணப்பத்தை நிராகரிக்கும் உரிமை இந்நிர்வாகத்திற்கு உண்டு.

ஆ) விண்ணப்பதாரர்களுக்கான தகவல் பரிமாற்றம் தபால் / இணையதளம் மூலம் தெரிவிக்கப்படும்.

07. **விண்ணப்பதாரர்களுக்கான எழுத்து தேர்வு சம்மந்தமான பொது விதிமுறைகள் :**

i. தேர்வாளர்கள் தேர்விற்கு வரும்பொழுது கண்ணியமான முறையில் உடையணிந்து தேர்வு மையத்திற்கு தேர்வு துவங்குவதற்கு அரை மணிநேரம் முன்னதாகவே தேர்வுக்கூட அனுமதிச் சீட்டு மற்றும் ஓட்டுநர் உரிம நகலுடன் ஆஜராக வேண்டும். எக்காரணங் கொண்டும் தேர்வாளர்கள் தேர்வு துவங்கிய பின்னர் தேர்வு கூடத்திற்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் தேர்வாளர்கள் தேர்வு நேரம் முடிந்த பிறகு மட்டுமே தேர்வு கூடத்திலிருந்து வெளியேற அனுமதிக்கப்படுவார்கள்.

ii. தேர்வாளர்கள் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட தேர்வு மையத்தில் மட்டுமே தேர்வு எழுத அனுமதிக்கப்படுவர். தேர்வுக் கூடம் இடம் மாற்றம் வேண்டி வரும் கோரிக்கைகள் ஏற்கப்படமாட்டாது.

iii. தேர்வாளர்கள் தேர்வுக்கூட அனுமதிச் சீட்டை அறை கண்காணிப்பாளர் / தலைமை கண்காணிப்பாளர் / ஆய்வு மேற்கொள்ளும் அதிகாரிகள் பரிசீலிக்க கோரும் பொழுது தவறாமல் காண்பிக்க வேண்டும்.

iv தேர்வாளர்கள் தேர்வு மையத்தில் ஒழுக்க கட்டுப்பாட்டுடன் இருத்தல் வேண்டும். தேர்வாளர்கள் புகைப்பிடித்தல் அல்லது மது அருந்துதல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளதாக கண்டுபிடிக்கப்பட்டாலோ, அல்லது, அவர்கள் மேற்பார்வையாளரிடமோ அல்லது தலைமை மேற்பார்வையாளரிடமோ அல்லது ஆய்வு செய்யும் அதிகாரிகளிடமோ அல்லது தேர்வு மையத்தில் தேர்வு எழுத வந்த மற்ற தேர்வாளரிடமோ தவறாக நடந்து கொண்டாலோ அல்லது வேறு வகையில் சண்டையிட்டாலோ, தேர்வு எழுத அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

v தேர்வாளர்கள் தேர்வறையினுள் பிற தேர்வாளர்களிடமிருந்து காப்பி அடித்தல் / தகவல் பரிமாற்றம் உள்ளிட்ட முறைகேடுகளில் ஈடுபடக் கூடாது.

vi. கைபேசி, கால்குலேட்டர், கடிகாரம் மற்றும் மோதிரங்கள் அல்லது நினைவு குறிப்புகள் உள்ளடக்கிய வேறு சாதனங்கள், மின்சாதனங்கள் மற்றும் மின்னனு சாதனங்கள், புத்தகங்கள், நோட்டுகள், கைப்பைகள் மற்றும் விண்ணப்பதாரரால் பயன்படுத்தப்படும் கடிகாரம் மற்றும் மோதிரம் அது சேர்ந்தோ அல்லது தனியாகவோ பதிவு செய்யும் கருவியாக இருந்தால் அத்தகைய சாதனங்களை தேர்வு அறைக்குள் கொண்டு வர அனுமதி இல்லை. தேவை ஏற்படின் தேர்வாளர்கள் தேர்வு மையத்திலேயே முழு சோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

vii. மேலே குறிப்பிடப்பட்டுள்ள சாதனங்களை விண்ணப்பதாரர்கள் வைத்திருந்தால், அவர்களின் விடைத்தாள் செல்லாததாக்கப்படுவதுடன் தேர்வு எழுதவும் அனுமதிக்கப்படமாட்டார்கள். தேர்வாளர்கள்

ஏதேனும் முறைகேட்டில் ஈடுபட்டதாக தேர்வுக்கூட கண்காணிப்பாளர்களால் கண்டறியப்பட்டால் தேர்வுக்கூடத்திலிருந்து உடனடியாக வெளியேற்றப்படுவார்கள்.

viii. தேர்வாளர்களின் பொருட்களுக்கு பாதுகாப்பு வசதி வழங்க இயலாத காரணத்தினால், கைபேசி கடிகாரம் மற்றும் இதர தடைசெய்யப்பட்ட பொருட்களை தேர்வாளர்கள் தேர்வுக்கூடத்திற்கு கொண்டு வரவேண்டாம் என்று அறிவுறுத்தப்படுகிறது.

ix. தேர்வறையில் தேநீர், காப்பி, சிற்றுண்டி, இதர பானங்கள் ஆகியவை அனுமதிக்கப்படமாட்டாது.

x. தேர்வாளர்கள் அவர்களின் பதிவு எண் அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடத்தில் மட்டுமே உட்கார வேண்டும். அதை மாற்றக் கூடாது. விடைத்தாள்களை நிரப்புவதற்காக கொடுக்கப்பட்ட அறிவுறுத்தல்களை அவர்கள் பின்பற்ற வேண்டும். விவரங்களை நிரப்புவதற்கு முன்னர், தேர்வாளர்கள் விடைத்தாள்கள்/விடை புத்தகங்கள் ஆகியவை ஒழுங்காக அச்சிடப்பட்டுள்ளதா என்றும், சேதமடையவில்லை என்பதையும் சரிபார்த்து உறுதி செய்ய வேண்டும். விடைத்தாள் /விடை புத்தகத்தில் குறை ஏதேனும் இருப்பின், தேர்வாளர்களின் விவரங்களை அதில் நிரப்புவதற்கு முன்னர் தேர்வாளர்கள் மேற்பார்வையாளருக்கு உடனடியாக தெரிவிக்க வேண்டும். அவ்வாறு குறை ஏதும் இருப்பின் மேற்பார்வையாளர்கள், விடைத்தாளை மாற்றி வழங்குவர். தேர்வாளர் தேர்வை எழுத ஆரம்பித்தபின்னர் குறை ஏதும் இருந்து முறையிட்டால் விடைத்தாள் மாற்றப்படமாட்டாது.

xi. தேர்வு துவங்குவதற்கு 10 நிமிடங்கள் முன்பு வினாத்தாள் தேர்வாளர்களுக்கு கொடுக்கப்படும். விடையளிக்க தொடங்கும் முன் அல்லது விடையை நிரப்புவதற்கு முன்னர். தேர்வாளர் அனைத்து கேள்விகளும் வரிசையாக எத்தகைய விடுபடுதலும் இல்லாமல் உள்ளனவா என்பதையும் மற்றும் வினாத் தொகுப்பில் வெற்றுப் பக்கங்கள் இல்லை என்பதையும் உறுதி செய்து கொள்ள வேண்டும். அவ்விதம் குறை ஏதேனும் இருப்பின் அதை மேற்பார்வையாளருக்கு உடனடியாக தெரிவித்தல் வேண்டும். அவர் வேறு ஒரு புதிய வினாத் தொகுப்பினை மாற்றி தருவார். தேர்வு தொடங்கிய பின்பு முறையிட்டால் வினாத்தொகுப்பு எக்காரணம் கொண்டும் மாற்றித் தரப்பட மாட்டாது.

xii. கருப்பு மற்றும் நீல மையிட்ட பந்து முனை பேனா மற்றும் அனுமதிசீட்டு மற்றும் ஓட்டுநர் உரிம நகல் மட்டுமே தேர்வுக்கூடத்திற்கு கொண்டு செல்ல வேண்டும். மற்ற பொருட்களுக்கு அனுமதி இல்லை.

xiii. தேர்வாளர்கள் கட்டாயமாக தங்கள் பதிவு எண்ணை வினாத்தொகுப்பில் அதற்குரிய கட்டங்களில் நிரப்புதல் வேண்டும்.

xiv. தேர்வாளர்கள் வினாத் தொகுப்பின் எந்தப் பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நடைபெறும் நேரத்தில் வினாத் தொகுப்பு மற்றும் விடைத்தாள் வெளியே எடுத்துச் செல்ல கூடாது. தேர்வு முடிந்தவுடன் வினாத்தொகுப்பினை தங்களுடன் எடுத்துச் செல்லலாம்.

குறிப்பு : Online-ல் விண்ணப்பிக்கும்போது குறிப்பிட்டுள்ள வழிமுறைகளுடன் மேற்குறிப்பிட்டுள்ள விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகளையும் படித்தபின் விண்ணப்பிக்க அனைத்து விண்ணப்பதாரர்களையும் கேட்டுக் கொள்ளப்படுகிறது. தேர்வு நடத்தப்படவுள்ள நாள், தேர்வு அனுமதி சீட்டு பதிவிறக்கம், தேர்வு முடிவுகள் தொடர்பான விபரங்கள் மற்றும் அறிவிப்புகள் ஆகியவற்றை விண்ணப்பதாரர்கள் அவ்வப்போது www.arasubus.tn.gov.in இணையதளத்தில் பார்வையிட்டு தெரிந்து கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.